உ

சிவமயம்,

திருச்சிற்றம்பலம்.

# திருத்தொண்டர் திருநாமக்கோவை

திருவருட்பிரகாசவள்ளலார்

திருவாய்மலர்ந்தருளிய

# சிவநாமாவலி.

இஃது

சிதம்பரம்

வே-சுந்தரம்பிள்ளை கேட்டுக்கொண்டபடி

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சுபானு௵.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருத்தொண்டர் திருநாமக்கோவை.

மெய்யன்பர் நாமமெல்லாம் வெவ்வேறுபோற்றிடவைங்
கையன்றிருவடியே காப்பு.

தில்லைவாழந்தணர்கள்சீர்நீலகண்டனா
ரில்லையளித்தவியற்பகையார் தொல்லை
யிளையான்குடிமாறர்மெய்ப்பொருளாரென்று
மிளையாவிறன்மிண்டரின்ப மளவுமமர்
நீதியெறிபத்தர்நீண்டபுகழேனாதி
நாதர்திருக்கண்ணப்பர்நற்கலயர் மேதகுசீர்
மாணக்கஞ்சாறரரிவாட்டாயரானாயர்
ஞானத்திருமூர்த்திநாயனார் மேன்மை
முருகர்பசுபதியார்முன்னாளைப்போவார்
துரிசிறிக்குறிப்புத்தொண்டர் மருவுமறைத்
தண்டீசர்வாகீசர்தக்ககுலச்சிறையார்
கொண்டமிழலைகுறும்பனார் தொண்டுசெயு
நீள்காரைக்காலம்மையப்பூதிநீலநக்கர்
மூனாநமிநந்திமுத்தமிழை யானுங்
திருஞானசம்பந்தர்செய்யகலிக்காம
ரருண்மூலர்தண்டியடிகள் வருமூர்க்கர்
சோமாசிமாறனார்சாக்கியனார்சூழாக்கூர்
நாமார்சிறப்புலியார்நற்செருண்டு சேனமச்
சிறுத்தொண்டர்சேரமான்செய்யகணநாதர்
திறற்களந்தைக்கூற்றுவனார்விஞ்சைத்திறத்து மிகும்

பொய்யடிமையில்லாப்புலவர்புகழ்ச்சோழர்
மொய்கொணாசிங்கமுனையரைய ரையயா
பத்தர்கலிக்கம்பர்கலியர்பகர்சத்தி
கைத்தபுலன்ஐயடிகள்காடவர்கோன்மெய்த்த கணட
புல்லனூர்காரிநெடுமாறர்புகழ்வாயிலார்
நல்லமுனையடுவார்நாயனூர் மல்குகழு
சிங்கரிடங்கழியார்தஞ்சைச்செருத்துணையார்
கொங்கார்புகழ்த்துணையார்கோட்புலியாராங் கணர்க்கு
பத்தராய்த்தாழ்வார்பரமனையேபாடுவார்
சித்தத்தைச்சிவன்பாலேசேர்த்துள்ளார் நித்த
முத்திநெறிகாட்டுமுதல்வர்முழுதுணர்ந்தோர்
பித்தனுறையாரூர்ப்பிறந்தார்க ளத்தனை
முப்பொழுதுந்தீண்டுவார்முழுநீறுபூசுவா
ரப்பாலுமீசனடிச்சார்ந்தார் மெய்ப்பூச
மானியார்நேசனூர்மாழ்செங்கட்சோழனூர்
பான்மையார்நீலகண்டப்பாணனூர் மென்மைய
சடையரிசைஞானியிவர்தம்மையெல்லாஞ்சேர்த்து
தொடையாகப்பாடியவன்றொண்டரடி யினைக
சிந்தனைசெய்திந்தத்திருநாமக்கோவைதனை
மந்திரமாக்கொண்டுமயிர்சிலிர்த்து னைந்து
மெய்யன்பாலென்றும்விளம்பப்பெறுவார்கள்
கைதவமும்பல்லறிவுங்கற்பனையு மையலுந்தீ
தத்துவிதாநந்தவைகண்டபரிபூரணத்தி
னித்தியமாவாழ்வார் நி

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சாம்பாயபரம்பிரம்மணே நம:

# திருஅருட்பிரகாசவள்ளலார்

திருவாய்மலர்ந்தருளிய

# சிவநாமாவளி.

---

சிவசிவ கஜமுக கணநாதா
சிவகண வந்தித குணநீதா. (௧)

சிவசிவ சிவசிவ தத்துவபோதா
சிவகுருபர சிவஷண்முகநாதா. (௨)

அம்பலத்தரசே அருமருந்தே
ஆனந்தத்தேனே அருள்விருந்தே. (௩)

பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெலாம்புகழ் கண்ணியனே. (௪)

சிவசிவசிவசிவசின்மயதேஜா
சிவசுந்தரகுஞ்சிதநடராஜா (௫)
மலைதருமகளேமடமயிலே
மதிமுகவமுதேயிளங்குயிலே, (௬)
ஆனந்தக்கொடியேயிளம்பிடியே
அற்புதத்தேனேமலைமானே. (௭)
படனவிவேகபரம்பரவேதா
நடனசபேசசிதம்பரநாதா. (௮)
அரிபிரமாதியர்தேடியநாதா
அரஅரசிவசிவஆடியபாதா. (௯)
அந்தணவங்கணஅம்பரபோகா
அம்பலநம்பரஅம்பிகைபாகா. (௰)
அம்பரவிம்பசிதம்பரநாதா
அஞ்சிதாஞ்சிதகுஞ்சிதபாதா. (௰௧
தந்திரமந்திரயந்திரபாதா
சங்கரசங்கரசங்கரநாதா. (௰௨)
கருணாநிதியேசபாபதியே
கதிமாநிதியேபசுபதியே. (௰௩)
சபாபதிபாதம்தபோபிரசாதம்
தயாநிதிபோதம்சதாதயவேதம். (௰௪)
கனகசிதம்பரகங்காபுரஹர
அனகபரம்பரசங்கரஹரஹர. (௰௫)

சகலகலாண்டசராசரகாரண
சகுணசிவாண்டபராபரபூரண, (௰௬)

சிதம்பிரகாசாபரம்பிரகாசா
சிதம்பரேசாசுயம்பிரகாசா. (௰எ)

அருட்பிரகாசம்பரப்பிரகாசம்
அகப்பிரகாசம்சிவப்பிரகாசம். (௰அ)

நடப்பிரகாசம்தவப்பிரகாசம்
நவப்பிரகாசம்சிவப்பிரகாசம். (௰௯)

போகம்சுகபோகம்சிவபோகமதுநித்தியம்
ஏகம்சிவம்ஏகசிவம்ஏகம்மிதுசத்தியம். (௨௰)

இக்கரைகடந்திடிலக்கரையே
இருப்பதுசிதம்பரசற்கரையே. (௨௧)

என்னுயிருடம்பொடுசித்தமதே
இனிப்பதுநடராஜபுத்தமுதே. (௨௨)

ஐயர்திருச்சபையாடகமே
ஆடுதலானந்தநாடகமே, (௨௩)

கனகாகரபுரஹரசிரகரதர
கருணாகரபரசுரவரஹரஹர. (௨௪)

கனகசபாபதிபசுபதிநவபதி
அனகவுமாபதியதிபதிசிவபதி. (௨௫)

உத்தரஞானசிதம்பரமே
சித்தியெலாந்தருமம்பரமே. (உச)

கருணாம்பரவரகரசிரபவபவ
அருணாம்பரதரஹரஹரசிவசிவ. (உரு)

அம்பலவாசிவமாதேவா
வம்பலவாவிங்குவாவாவா. (உசா)

சங்கரசிவசிவமாதேவா
எங்களையாட்கொளவாவாவா (உஎ)

அரகரசிவசிவமாதேவா
அருளமுதந்தரவாவாவா. (உஅ)

நடராஜனெல்லார்க்குநல்லவனே
நல்லவெலாஞ்செயவல்லவனே. (உகூ)

நடராஜமாணிக்கமொன்றதுவே
நண்ணுதலாணிப்பொன்மன்றதுவே, (ஙா)

நடராஜபலமதுநம்பலமே
நடமாடுமதுதிருவம்பலமே. (ஙக)

நடராஜவள்ளனாடுதலே
நந்தொழிலாம்விளையாடுதலே, (ஙஉ)

ஆனந்தநாடகங்கண்டோமே
மானந்தபோனகங்கொண்டோமே. (ஙங)

வேதாந்தபராம்பரசவுதய
நாதாந்தநடாம்பரஜயஜய. (௩௬)

ஏகாந்தசர்வேசசமோதம
யோகாந்தநடேசநமோநம, (௩௭)

ஆதாம்பரவாடகவிசய
பாதாம்புஜநாடகஜயஜய. (௩௮)

போதாந்தபுரேசசிவாகம
நாதாந்தநடேசநமோநம. (௩௯)

சகளவுபகளநிட்களநாதா
உகளசததளமங்களபாதா, (௪௰)

சந்ததமுஞ்சிவசங்கரபஜனம்
சங்கிதமென்பதுசர்ஜனவசனம். (௪௧)

சதபரிசதவுபசதமதவிதபவ
சிதபரிகதபதசிவசிவசிவசிவ. (௪௨)

அரகரவரசுபகரகரபவபவ
சிரபுரசுரபரசிவசிவசிவசிவ. (௪௩)

ஜாலகோலகனகாம்பரசாயக
காலகாலவனகாம்பரநாயக (௪௪)

நடனசிகாமணிநவமணியே
திடநகமாமணிசிவமணியே. (௪௫)

நடமிடுமம்பலநன்மணியே
படமிடுசெம்பலபொன்மணியே. (௪௬)
உவட்டாதுசித்திக்குமுள்ளமுதே
தெவிட்டாததித்திக்குந்தெள்ளமுதே. (௪௭)
அருட்பொதுநடமிடுதாண்டவனே
அருட்பெருஞ்சோதியென்றாண்டவனே. (௪௮)
நடுநாடிநடுநாடிநடமாடுபதியே
நடராஜநடராஜநடராஜபதியே, (௪௯)
நடுநாடியொடுகூடிநடமாடுமுருவே
நடராஜநடராஜநடராஜகுருவே (௫௰)
நடுநாடியிடைநாடிநடமாடுநலமே
நடராஜநடராஜநடராஜபலமே, (௫௧)
வரகோசாந்தமகோதயபாரிய
பாபாசாந்தசுகோதயசூரிய (௫௨)
பளிதீபசோபிதபாதா
வெளிதருபகஸ்தாபிதநாதா. (௫௩)
அறுவர்தகோபகருணைம்பகநாதா
அமிர்தருபகருணைம்புஜபாதா (௫௪)
உபலசிராதலைசிபகணைவம்சனை
சபலகராதலகணைபணைகம்சனை (௫௫)

அம்போருகபதஅரஹரசங்கர
சம்போ சிவசிவசிவசிவசங்கர (௫௬)
அபயவரதகரதலபுரிகாரண
உபயபரதபதபரபரிபூரண. (௫௭)
அகரவுகரசுபகரவசினகர
தகரவகரநவபுரசிரதினகர (௫௮)
வகரசிகரதினகரசசிகரபுர
மகரஅகரவரபுரஹரஹரஹர (௫௯)
இனித்துயர்படமாட்டேன்விட்டேனே
என்குருமேலாணையிட்டேனே. (௬௰)
இனிப்பாடுபடமாட்டேன்விட்டேனே
என்னப்பன்மேலாணையிட்டேனே, (௬௧)
சன்மார்க்கம்நன்மார்க்கம்நன்மார்க்கம்
சகமார்க்கம்துன்மார்க்கம்துன்மார்க்கம் (௬௨)
நடராஜர்பாட்டேநறும்பாட்டு
ஞாலத்தார்பாட்டெல்லாம்வெறும்பாட்டு. (௬௩)
சிதம்பரப்பாட்டேதிருப்பாட்டு
சிவர்கள்பாட்டெல்லாந்தெருப்பாட்டு (௬௪)
அம்பலப்பாட்டேஅருட்பாட்டு
அல்லாதபாட்டெல்லாமருட்பாட்டு. (௬௫)

நாதபரம்பரனே பரநாதசிதம்பரனே
நாததிகம்பரனே தசநாதசுதந்தரனே, (௬௬)

ஞானநடத்தவனே பரஞானியிடத்தவனே
ஞானவரத்தவனே சிவஞானபுரத்தவனே. (௬௭)

ஞானசபாபதியே மறைநாடுசதாகதியே,
தீனதயாநிதியே பரதேவியுமாபதியே. (௬௮)

நீயென்னப்பனல்லவா நினக்குமின்னஞ்சொல்லவா
தாயின்மிக்கனல்லவா சர்வசித்திவல்லவா, (௬௯

அம்பலவாணர் தம்மடியவரோ
அருளரசாள்மணிமுடியவரே. (௭௰)

நாதாந்தநாட்டுக்குநாயகரே
நடராஜரே சபாநாயகரே. (௭௧)

நான்சொல்லுமிதுகேளீர்சத்தியமே
நடராஜவெளில்வரும்நித்தியமே, (௭௨)

நல்லோரெல்லார்க்குஞ்சபாபதியே
நல்வரமீயுந்தயாநிதியே, (௭௩)

நடராஜர்தன்னடனன்னடமே
நடம்புரிகின்றதுமென்னிடமே, (௭௪)

சிவகாமவல்லிக்குமாப்பிள்ளையே
திருவாளனனவன்சீர்ப்பிள்ளையே, (௭௫)

சிவகாமவல்லியைச்சேர்ந்தவனே
சித்தெல்லாஞ்செய்திடத்தேர்ந்தவனே, (௭௬)

இறவாவரந்தருநற்சடையே
எனமறைபுகழ்வதுசிற்சபையே, (௭௭)

என்னிருகண்ணுளிருந்தவனே
இறவாதருளுமருந்தவனே, (௭௮)

நமலங்கலமுறுமம்பலநடனம்பொதுநடனம்பல
நன்கருள்சிவசங்கரபடனம்மதுபடனம், (௭௯)

சபாசிவாமஹாசிவாசகாசிவாசகாசிவா
சதாசிவாசதாசிவாசநாசிவாசநாசிவா, (௮௰)

வாசிவாசதாசிவாமஹாசிவாதயாசிவா
வாசிவாசிவாசிவாசிவாசிவாசிவாசிவா, (௮௧)

---

அஞ்சலஞ்சலென்றுவந்தனெஞ்சமர்ந்தகுழகனே
வஞ்சனஞ்சமுண்டகண்டமன்றுளமின்றவழகனே (௮௨)

தொண்டர்கண்டுகண்டுமொண்டுகொண்டுருண்ட
வின்பனே, அண்டரண்டமுண்டவிண்டுதொண்டுமண்டு
மன்பனே. (௮௩)

கந்தொதாந்தபாந்தசிந்தசிந்தவந்தகாலமே
எந்தனந்தச்சந்தமுற்றுவந்தவந்தகோலமே. (௮௪)

ஒன்றுமொன்றிரென்றிமன்று ணன்றுநின்றவீ
னே, ஒன்றுமொன்று மொன்றுமொன்று மொன்றுமொ
ன்றநேசனே, (௮௫)

எட்டஎட்டிவொட்டவொட்டுமிட்டதிட்டகீர்த்தியே
அட்டவட்டநட்டமிட்டஙிட்டவட்டமூர்த்தியே, (௮௬)

சேரிகாரசாரவாரசீரகாரஹாரனே
ஒருகாரதோரதீரவாரவாரதாரனே, (௮௭)

வெய்யநொய்ஞையநையநையமெய்புகன்றதுய்யனே
ஐயரையநையவையமுய்யநின்றஐயனே, (௮௮)

பாசநாசபாபநாசபாதநேசவீசனே
வாசவாசதாசர்நேசவாசகாசபேசனே, (௮௯)

உரியதுரியபெரிய வெளியிலொளியி லொளிசெய்ந
டனனே, பிரியவரியபிரியமுடையபெரியரிதயபடனனே,

அகிலபுவனவுயிர்கள்தழைய அபயமுதவும்அமல
னே,அயனுமரியுமாஜுமகிழஅருளுநடனவிமலனே, ( )

நினைக்கில்நெஞ்சமினிக்குமென்றமிருக்குமன்றிலொ
ருத்தனே,நினைக்குமன்பர்நிலைக்கநின்றுபொருத்துகின்ற
கருத்தனே, (௯௨)

மயங்கிநெஞ்சுகலங்கிநின்று மலங்கினேனையாண்ட
வா, வயங்கிநின்றுதுலங்குமன்றி லிலங்குஞானத்தாண்ட
வா, (௯௩)

களங்கவாதகளங்கொள்சூத ருளங்கொள்ளாதயாத னே, களங்கில்லாதவுளங்கொள்வாருள் விளங்குஞானநாதனே, (௧௪)

தடுத்தமலத்தைக் கெடுத்துநலத்தைக் கொடுத்தக்கருணைத்தந்தையேதனித்தநிலத்திலினித்தகுலத்திற்குனித்தவடிகொளெந்தையே, (௧௫)

எச்சநீட்டி விச்சைகாட்டி யிச்சையூட்டுமன்பனே, அச்சமோட்டியச்சநாட்டிவைச்சுளாட்டுமன்பனே (௧௬)

தங்குறுவம்புமங்கநிரம்புசங்கமியம்புநங்கொழுகொம்பு, சங்கரசம்புசங்கரசம்புசங்கரசம்புசங்கரசம்பு (௧௭)

சந்தமியன்றுஅந்தணர்நன்று சந்ததநின்றுவந்தனமென்று, சந்திசெய்மன்றுமந்திரமொன்றுசங்கரசம்பு சங்கரசம்பு, (௧௮)

நான்சொன்னபாடலுங்கேட்டாரே
ஞானச்சிதம்பரநாட்டாரே (௧௯)

ஆதிநீதிவேதனேயாடல்நீடுபாதனே
வாதிஞானபோதனேவாழ்கவாழ்கநாதனே, (௨௰)

அங்கசங்கமங்கைபங்கஆதிஆதிஆதியே
துங்கபுங்கவங்கலிங்கஜோதிஜோதிஜோதியே, (௨௧)

அத்தமுத்தஅத்தமுத்த ஆதிஆதிஆதியே
சித்தசித்தசப்தபிர்த்த ஜோதிஜோதிஜோதியே (௰ )
ஆயவாயநேயஞேயமாயஞாயவாதியே
தூயவாயகாயதேயதோயமேயஜோதியே, (௰ )
ஆதவாதவேதகீதவாதவாதவாதியே
சூதவாதபாதநாதசூதஜாதஜோதியே (௰ )
ஜோதிஜோதிஜோதிசுயம்ஜோதிஜோதிஜோதியே
ஜோதிஜோதிஜோதியருள்ஜோதிஜோதிஜோதிசிவம்(௰

---

பொதுவிலையருள்வதுபொதுவினில்நிறைவது
பொதுநலமுடையதுபொதுநடமிடுவது
அதுபரமதுபதியதுபொருளதுசிவம்
அரஅரஅரஅரஅரஅரஅரஅர, (௰௬)

நவநிலைதருவதுநவவடிவுறுவது
நவவொளிநடுவதுநவதவநவமது
சிவமெனுமதுபதமதுகதியதுபொருள்
சிவசிவசிவசிவசிவசிவசிவசிவ, (௰௭)

பலத்திற்றன்னம்பலத்திற்பொன்னம்
பலத்திற்றன்னம்பலத்தனே
பலத்திற்பன்னும்பரத்திற்றும்
பரத்தின்மன்னுங்குலத்தனே, (௰௮)

பசியாதவமுதே பகையாதபதியே
பகராதநிலையே பறையாதசுகமே
நசியாதபொருளே நலியாதவுறவே
நடராஜமணியே நடராஜமணியே. (௱௯)

புரையாதமணியே புகலாதநிலையே
புகையாதகனலே புதையாதபொருளே
நரையாதவரமே நடியாதநடமே
நடராஜநிதியே நடராஜநிதியே. (௱௰)

சிவஞானநிலையே சிவயோகநிறைவே
சிவயோகவுருவே சிவஞானவுணர்வே
நவநீதமதியே நவநாதகதியே
நடராஜபதியே நடராஜபதியே, (௱௰௧)

தவயோகபலமே சிவஞானபலமே
தலையேறுமணியே விலையேறுமணியே
நவவாரநடமே சுவகாரபுடமே
நடராஜபரமே நடராஜபரமே. (௱௰௨)

துதிவேதவுறவே சுகபோதநறவே
துனிதீருமிடமே தனிஞானநடமே
நதியாரநிதியே யதிகாரபதியே
நடராஜகுருவே நடராஜகுருவே. [௱௰௩)

வயமானவரமே வியமானபரமே
மனமோனநிலையே கனஞானமலையே

நயமானவுரையே நடுவானவுரையே
நடராஜதுரையே நடராஜதுரையே. (நா

பரநடஞ்சிவ சிதம்பரநடமே
பதிநடஞ்சிவ சபாபதிநடமே
திருநடம்பர குருநடமே
சிவநடம்பர நவநடமே (நா )

அகரசபாபதி சிகரசபாபதி
அனகசபாபதி கனகசபாபதி
மகரசபாபதி யுதரசபாபதி
வரதசபாபதி சரதசபாபதி. (நா )

அமலசபாபதி அபயசபாபதி
அமுதசபாபதி அகிலசபாபதி
நிமலசபாபதி நிபுணசபாபதி
நிலயசபாபதி நிபிடசபாபதி. (நா )

நீதியவேதந் தேடியபாதம்
நேடியகீதம் பாடியபாதம்
ஆடியபோதம் கூடியபாதம்
ஆடியபாதம் ஆடியபாதம் (நா )

சாக்கியவேதந் தேக்கியபாதம்
தாக்கியயேதம் போக்கியபாதம்
சோக்கியவாதம் ஆக்கியபாதம்
தூக்கியபாதம் தூக்கியபாதம். (நா )

ஏன்றியசூதந் தோன்றியபாதம்
ஈன்றியநாதம் ஆன்றியபாதம்
ஓன்றியபூதம் ஞான்றியபாதம்
ஊன்றியபாதம் ஊன்றியபாதம் (௱௨௰)

சஞ்சிதவீடும் நெஞ்சிதபாதம்
தஞ்சிதமாகும் சஞ்சிதபாதம்
கொஞ்சிதமேவும் ரஞ்சிதபாதம்
குஞ்சிதபாதம் குஞ்சிதபாதம் (௱௨௧)

எண்ணியநானே திண்ணியனானேன்
எண்ணியவாறே நண்ணியபேறே
புண்ணியனானேன் அண்ணியனானேன்
புண்ணியவானே புண்ணியவானே. (௱௨௨)

கொத்தியசீரே பொத்தியபேரே
துத்தியபாவே பத்தியநாவே
சத்தியம்நானே நித்தியனானேன்
சத்தியவானே சத்தியவானே (௱௨௩)

எம்புலப்பகையே எம்புலத்துறவே
எங்குலத்தவமே எங்குலச்சிவமே
அம்பினிற்கனலே அந்தணர்க்கிறையே
அம்பலத்தரசே அம்பலத்தரசே (௱௨௪)

இன்புடைப்பொருளே இன்சுவைக்கனியே
என்குணச்சுடரே இந்தகத்தொளியே

அன்புடைக்குருவே அம்புயற்கிறையே
அம்பலத்தமுதே அம்பலத்தமுதே (ஙாஉ

பதியுறுபொருளே பொருளுறுபயனே
பயனுறுநிறைவே நிறைவுறுவெளியே
மதியுறுமமுதே யமுதுறுசுவையே
மறைமுடிமணியே மறைமுடிமணியே (ஙாஉ

அருளுறுவெளியே வெளியுறுபொருளே
அதுவுறுமதுவே மதுவுறுசுவையே
மருளறுதெருளே தெருளுறுமொளியே
மறைமுடிமணியே மறைமுடிமணியே (ஙாஉ

தருவளர்நிழலே நிழல்வளர்சுகமே
தடம்வளர்புனலே புனல்வளர்நலமே
திருவளருருவே யுருவளருயிரே
திருநடமணியே திருநடமணியே (ஙாஉ

உயிருறுமுணர்வே யுணர்வுறுமொளியே
ஒளியுறுவெளியே வெளியுறுவெளியே
செயலறுபதியே சிவநிறைநிதியே
திருநடமணியே திருநடமணியே (ஙாஉ

கலைநிறைமதியே மதிநிறையமுதே
கதிர்நிறைகதிரே கதிர்நிறைசுடரே
சிலைநிறைநிலையே நிலைநிறைசிவமே
திருநடமணியே திருநடமணியே, (ஙாந

மிகவுயர்நெறியே நெறியுயர்விளைவே
விளைவுயர்சுகமே சுகமுயர்பதமே
நிகழுயருயர்வே வுயருயருயர்வே
திருநடமணியே திருநடமணியே (௱௩௧)

இயல்கிளர்மறையே மறைகிளரிசையே
இசைகிளர்துதியே துதிகிளரிறையே
செயல்கிளரடியே யடிகிளர்முடியே
திருநடமணியே திருநடமணியே (௱௩௨)

புரையறுபுகழே புகழ்பெறுபொருளே
பொருளதுமுடியே முடிவறுபுணர்வே
திரையறுகடலே கடலெழுசுதையே
திருநடமணியே திருநடமணியே (௱௩௩)

நிகழ்தவநிலையே நிலையுயர்நிலையே
நிறையருணிதியே நிதிதருபதியே
நிகழ்சிவபதமே சிவபதசுகமே
திருநடமணியே திருநடமணியே. (௱௩௪)

அம்பலத்தொருநட முருநடமே
அருணடமொருநடந் திருநடமே
எம்பலத்தொருநடம் பெருநடமே
இதன்பரத்திருநடங் குருநடமே (௱௩௫)

அம்பலவாணனை நாடினனே
அவனடியாரொடுங் கூடினனே

தம்பதமாம்புகழ்பாடினேனே
தந்தனவென்றுகூத்தாடினேனே. (ா கூ

அருட்பெருஞ்சோதியைக் கண்டேனே
ஆனந்தத்தெள்ளமு துண்டேனே
இருட்பெருமாயையை விண்டேனே
எல்லாஞ்செய்சித்தியைக் கொண்டேனே (ா கூ

கையுறவிலாது நடுக்கண்புருவப்பூட்டு
கண்டுகளிகொண்டு திறந்துண்டுநடுநாட்டு
ஐயர்மிகவுய்யும்வகை அப்பர்விளையாட்டு
ஆடுவதென்றேமறைகள் பாடுவதுபாட்டு (ஃ கூ

சிற்சபையும்பொற்சபையுஞ் சொந்தமெனதாச்சு
தேவர்களுமூவர்களும் பேசுவதென்பேச்சு
இற்சமயவாழ்விலெனக் கென்னயினிபேச்சு
என்பிறவித்துன்பமெலா மின்றோடேபோச்சு (ஈ கூ

சிற்பொதுவும்பொற்பொதுவும்நானறியலாச்சு
சித்தர்களுமுத்தர்களும் பேசுவதென்பேச்சு
இப்பகருமிவ்வுலகி லென்னையினிபேச்சு
என்பிறவித்துன்பமெலா மின்றோடேபோச்சு (ா சு

ஐயரருட்ஜோதி யரசாட்சியெனதாச்சு
ஆரணமுமாகமமும் பேசுவதென்பேச்சு
எய்யுலகவாழ்விலெனக் கென்னயினிபேச்சு
என்பிறவித்துன்பமெலா மின்றோடேபோச்சு (ா சு

மேருமலையுச்சியில் விளங்குகம்பநீட்சி
மேவுமதன்மேலுலகில் வீறுமரசாட்சி
சேருமதிற்கண்டபல காட்சிகள்கண்காட்சி
செப்பலறிதாமிதற்கென்னப்பனருள்சாட்சி (௱௪௨)

ஈசனருளாற்கடலி லேற்றதொருவோடம்
ஏறிக்கரையேறின னிருந்ததொருமாடம்
தேசுறுமம்மாடநடுத் தெய்வமணிபீடம்
தீபவொளிகண்டவுடன் சேர்ந்ததுசந்தோடம் (௱௪௩)

அம்பலத்திலெங்களைய னாடியநல்லாட்டம்
அன்பொடுதுதித்தவருக் கானதுசொல்லாட்டம்
வம்புசொன்னபேர்களுக்கு வந்ததுமல்லாட்டம்
வந்ததலையாட்டமன்றிவந்ததுபல்லாட்டம் (௱௪௪)

நாத்திகஞ்சொல்கின்றவர்தம் நாக்குமுடைநாக்கு
நாக்குருசிகொள்ளுவதும் நாறியபிண்ணாக்கு
சீர்த்திபெறுமம்பலவர் சீர்புகன்றவாக்கு
செல்வாக்குநல்வாக்கு தேவர்திருவாக்கு (௱௪௫)

வலதுசொன்னபேர்களுக்கு வந்ததுவாய்த்தாழ்வு
மற்றவரைச்சேர்ந்தவர்க்கும் வந்ததலைத்தாழ்வு
வலதுபுஜமாடநம்பால் வந்ததருள்வாழ்வு
மற்றுநமைச்சூழ்ந்தவர்க்குவந்ததுநல்றவாழ்வு (௱௪௬)

ஏந்தாளென்றிடிலிந்தாநம்பதமென்றீயும்பரமன்றுடும்பது
என்றேருடுந்தன நன்றுமங்கண வெங்கேமங்களவெஞ்சா

நெஞ்சக, சந்தோடம்பறவந்தாளந்தனைசம்போசங்கர
போசங்கரசம்போசங்கரசம்போசங்கர ௱௪

பாநம்புறுபவரிங்குறு பவசங்கடமறவின்றிடு
பாமம்பொதுநடமென்றனை நுளநம்புறுவருளம்பற
சிதகுஞ்சிதபதாஞ்சித சிவசுந்தரசிவமந்திர
சிவசங்கரசிவசங்கர சிவசங்கரசிவசங்கர (௱௪

நஞ்சேசாவென்றிடுநங்கோடபங்கெட நன்றேநுங்கெதனைநந்
மந்தண-நம்பாநெஞ்சினிரம்பானம்பரநம்பாரம்பதி
பாதம்பதி- தஞ்சாவென்றவர்தஞ்சோபங்கெடுநசம்போ
ங்கரசம்போசங்கர- சம்போசங்கரசம்போசங்கரசம்போ
சங்கரசம்போசங்கர. (௱௪௪

அஞ்சோடஞ்சனைவயேலாதே அஞ்சோடிங்கெனலாகா
அந்தோவெந்துயர்சேராதே அஞ்சோகஞ்சுகமோவாதே
தஞ்சோபங்கொலைசாராதே சந்தோடஞ்சிவமாமீதே
சம்போசங்கரமாதேவா சம்போசங்கரமாதேவா. (௱௫

கலகந்தருமவலம்பன கதிளம்பலவிதரும்
கணந்தருமணிமன்றாறு கதிதந்தருளுடலஞ்
சலசந்திரனெனநின்றவர் தழுரும்பரசரணம்
சரணம்பதிசரணஞ்சிவ சரணங்குருசரணம், (௱௫௪

எனதென்பதுமினதென்பதுமிதுவென்றுணர்தருணம்
இனமொன்றதுபிறிதென்றனைவிசைகின்றதுபரமம்
தனதென்பதுமனதென்பது ஜகமென்றனைசரணம்
சரணம்பதிசரணம்சிவ சரணங்குருசரணம் (௱௫௨

அகரவுகரமகர வகரவமுதசிகரசரணமே
அபரசபரவமனசமன வமலநிமலசரணமே
தகரககனநடனகடன சகளவகளசரணமே
சகுணநிகுணசகமநிகம சகிதவிகிதசரணமே. (௱௫௩)

உளமுமுணர்வுமுயிருமொளிர வொளிருமொருவசரண
மே-உருவினுருவுமுருவுளுருவுமுடையதலைவசரணமே
இளகுமிதயகமலமதனையிறைகொளிறைவசரணமே
இமையொருமையநலமுமருளுமினியசமுகசரணமே.()

அடியுநடுவுமுடியுமறியவரியபெரியசரணமே
அடியரிதயவெளியினடனமதுசெய்யதிபசரணமே
ஒடிவில்கருணையமுதமுதவுமுபலவடிவசரணமே
உலகமுழுதுமுறையநிறையுமுபயசரணசரணமே. ()

அறிவுளறியுமறிவையறியவருளுநிமலசரணமேஅவசமு
றுமெய்யடியரிதயமமருமமலசரணமே- எறிவிலுலகினு
யிரையுடலிலிணைசெய்யிறைவசரணமே. எனையுமொரு
வனெனவுள்ளுணருமெனதுதலைவசரணமே. (௱௫௬)

உமைக்கொருபாதி கொடுத்தருணீதி
உவப்புறுவேதி நவப்பெருவாதி
அமைத்திடுபூதி யகத்திடுமாதி
அருட்சிவஜோதி அருட்சிவஜோதி. (௱௫௭)

நகப்பெருஞ்சோதி சுகப்பெருஞ்சோதி
நவப்பெருஞ்சோதி சிவப்பெருஞ்சோதி

அகப்பெருஞ்சோதி நடப்பெருஞ்சோதி
அருட்பெருஞ் சோதி யருட்பெருஞ்சோதி. (எ௫

நனைந்தலைவீதி நடந்திடுசோதி
நலங்கொளிநீதி நடம்புரிநீதி
தினங்கலையோதி சிவந்தருமோதி
சிதம்பரஜோதி சிதம்பரஜோதி (எ௬

ஓதவடங்காது மடங்காது தொடங்காது
ஓகையொடுங்காது குடுங்காது நடுங்காது
சூதகமலங்காது விலங்காது கலங்காது
ஜோதிபரஞ்ஜோதி சுயம்ஜோதி பெருஞ்ஜோதி. (எகா

ஏதமுயங்காது சுயங்காது மயங்காது
ஏதியிறங்காது உறங்காது கறங்காது
சூதபிணங்காது பிணங்காது வணங்காது
ஜோதிபரஞ்சோதி சுயஞ்சோதி பெருஞ்சோதி (கச

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி யேறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி யேகஜோதி யேகஜோதி யேகஜோதி. (கஎஉ

என்னுயிர்காத்தானென் றூதூதுசங்கே
இன்பம்பலித்ததென் றூதூதுசங்கே
பொன்னுருத்தந்தானென் றூதூதுசங்கே
பொற்சபையப்பனென் றூதூதுசங்கே. (

சிவமாக்கிக்கொண்டானென் றூதூதுசங்கே
சிற்றம்பலத்தானென் றூதூதுசங்கே
நவநோக்களித்தானென் றூதூதுசங்கே
நானவனானேனென் றூதூதுசங்கே (௨)

தெள்ளமுதானானென் றூதூதுசங்கே
சிற்சபையப்பனென் றூதூதுசங்கே
உள்ளமுவந்தானென் றூதூதுசங்கே
உள்ளதுரைத்தானென் றூதூதுசங்கே (௩)

நாதமுடையானென் றூதூதுசங்கே
ஞானசபையானென் றூதூதுசங்கே
பாதமளித்தானென் றூதூதுசங்கே
பலித்ததுபூசையென் றூதூதுசங்கே. (௪)

என்னறிவானானென் றூதூதுசங்கே
எல்லாஞ்செய்வல்லானென் றூதூதுசங்கே
செங்கோலைதந்தானென் றூதூதுசங்கே
சிற்சபையப்பனென் றூதூதுசங்கே. (௫)

இருவாமையீந்தானென் றூதூதுசங்கே
எண்ணம்பலித்ததென் றூதூதுசங்கே
திறமையளித்தானென் றூதூதுசங்கே
சிற்றம்பலத்தானென் றூதூதுசங்கே. (௬)

காவுதவிர்ந்ததென் றூதூதுசங்கே
கருணைக்கிடைத்ததென் றூதூதுசங்கே

இரவுவிடிந்ததென்றூதாதுசங்கே
எண்ணம்பலித்தானென்றூதாதுசங்கே. (௧

எல்லாஞ்செய்வல்லானென்றூதாதுசங்கே
எல்லார்க்குநல்லானென்றூதாதுசங்கே
எல்லாமுடையானென்றூதாதுசங்கே
எல்லாமுமானானென்றூதாதுசங்கே, ௨

கருணாநிதியனென்றூதாதுசங்கே
கடவுளவனேயென்றூதாதுசங்கே,
அருளுடைத்தானென்றூதாதுசங்கே
அம்பலச்சோதியென்றூதாதுசங்கே (௩

தன்னிகரில்லானென்றூதாதுசங்கே
தலைவனவனேயென்றூதாதுசங்கே
பொன்னியல்வண்ணனென்றூதாதுசங்கே
பொதுநடஞ்செய்வானென்றூதாதுசங்கே. (௪

அம்பலவர்வந்தாரென்றுசின்னம்பிடி
அற்புதஞ்செய்கின்றாரென்றுசின்னம்பிடி
செம்பலனளித்தாரென்றுசின்னம்பிடி
சித்திநிலைபெற்றதென்றுசின்னம்பிடி. (௫

சிற்சபையைக்கண்டோமென்றுசின்னம்பிடி
சித்திகள்செய்கின்றோமென்றுசின்னம்பிடி
பொற்சபைபுகுந்தோமென்றுசின்னம்பிடி.
புத்திமகிழ்கின்றோமென்றுசின்னம்பிடி. (௬

ஞானசித்திபுரமென்றுசின்னம்பிடி
நாடகஞ்செய்யிடமென்றுசின்னம்பிடி
ஆனசித்திசெய்வோமென்றுசின்னம்பிடி
அருட்சோதிபெற்றோமென்றுசின்னம்பிடி. (௩)

கொடிகட்டிக்கொண்டோமென்றுசின்னம்பிடி
கூத்தாடுகின்றோமென்றுசின்னம்பிடி
அடிமுடியைக்கண்டோமென்றுசின்னம்பிடி
அருளமுதமுண்டோமென்றுசின்னம்பிடி. (௪)

அப்பர்வருகின்றாரென்றுசின்னம்பிடி
அற்புதஞ்செய்வதற்கென்றுசின்னம்பிடி
செப்பநிலைபெற்றதென்றுசின்னம்பிடி
சித்திபுரமிடமென்றுசின்னம்பிடி. (௫)

தானேநானானேனென்றுசின்னம்பிடி
சத்தியஞ்சத்தியமென்றுசின்னம்பிடி
ஊனேபுகுந்ததென்றுசின்னம்பிடி
ஒளிவண்ணமானதென்றுசின்னம்பிடி, (௬)

வேகாதகாலுணர்ந்துசின்னம்பிடி
வேகாநடுத்தெரிந்துசின்னம்பிடி
சாகாத்தலையறிந்துசின்னம்பிடி
சாகாதகல்விகற்றுசின்னம்பிடி. (௭)

மீதானமிலேயேறிசின்னம்பிடி
வெட்டவெளிநடுவின்றுசின்னம்பிடி
வேதாமங்கடந்துசின்னம்பிடி
வேதாந்தசித்தாந்தசின்னம்பிடி. (௧

பன்மார்க்கமுங்கடந்துசின்னம்பிடி
பன்னிரண்டுமீதிரிந்துசின்னம்பிடி
சன்மார்க்கமார்க்கமென்றுசின்னம்பிடி
சத்தியஞ்செய்யின்னேருமென்றுசின்னம்பிடி (௨

சித்தாடுகின்றேருமென்றுசின்னம்பிடி
செந்தாமரைபூவரென்றுசின்னம்பிடி
யித்தாரணியிலென்றுசின்னம்பிடி
யிதுவேதருணமென்றுசின்னம்பிடி, (௩

உ

திருச்சிற்றம்பலம்.

# சிவநாமஉந்தியார்.

இரவுவிடிந்ததிணையடிவாய்த்தன பரவிமகிழ்ந்தே
னென்றுந்தீபற, பாலமுதுண்டேனென்றுந்தீபற. ௧
பொழுதுவிடிந்ததுபொற்பாதம்வாய்த்தன தொழு
துமகிழ்ந்தேனென்றுந்தீபற தூயவனென்றுந்தீபற.(௨
தூக்கந்தொலைந்ததுசூரியன்றோன்றினனேக்கந் தவி
ர்ந்தேனென்றுந்தீபற, இன்னமுதுண்டேனென்றுந்தீபற
துன்பந்தவிர்ந்தது தூக்கந்தொலைந்தது இன்பங்கிடை
த்ததென்றுந்தீபற; எண்ணம்பலித்ததென்றுந்தீபற. ௩
ஞானமுதித்ததுநாதமொலித்தது தீனந்தவிர்ந்தே
னென்றுந்தீபற, சிற்சபைகண்டேனென்றுந்தீபற. ௪
திரையற்றுவிட்டது செஞ்சுடர்தோன்றிற்று பரை
யொளியோங்கிற்றுந்தீபற, பலித்ததுபூசையென்றுந்தீபற
உள்ளிருணீங்கிற்றென் னுள்ளொளியோங்கிற்றுத்
தெள்ளமுதுண்டேனென்றுந்தீபற, தித்திக்கவுண்டே
னென்றுந்தீபற. ௫

எந்தையைக்கண்டேனிடரெல்லாநீங்கினேன்சிந் களித்தேனென்றுந்தீபற,சித்தனுமானேனென்றுந்தீ.

தந்தையைக்கண்டேன்சாகாவரம்பெற்றேன் தைகளித்தேனென்றுந்தீபற சித்தனுமானேனென் தீபற,

முத்தியைப்பெற்றேனம்முத்தியினால் ஞானசி த்தியையுற்றேனென்றுந்தீபற, சித்தனுமானேனென்று பற.

ஞாலமோங்குக நான்மறைநீடுக
சீலமன்னவர் செங்கோல்விளங்குக
காலமாமழை மன்னுககாதலாற்
சாலவீசனடியார் தழைகவே

திருச்சிற்றம்பலம்.

முற்றும்.